## கொட்டித் தீர்க்கும் வட கிழக்குப் பருவமழையை எதிர் கொண்டு



# சென்னை மாநகரில் கழக அரசு மேற்கொள்ளும் போர்க்கால நடவடிக்கைகள்!






● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, ராயபுரம் மண்டலம், அண்ணா சாலை பகுதியில், மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணி நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க நகர் மண்டலம், ஓட்டேரி, பிரிக் கிளன் சாலையில், நேற்று முன்தினம் (15.10.2024) அதிக மழைநீரால் ஏற்பட்டுள்ள அடைப்புகளை மாநகராட்சி ஊழியர்கள் மூலம் அகற்றும் பணி நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு108க்குட்பட்ட தாஸ்புரம் மற்றும் பிருந்தாவன் 3வது தெரு ஆகிய பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் (15.10.2024) மதிய உணவு வழங்கப்பட்டது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், கிருஷ்ணமா சாலையில், டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணி நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க நகர் மண்டலம், புரசைவாக்கம் சந்திப்பு பகுதியில், டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணி நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, ராயபுரம் மண்டலம், எழும்பூர் பாந்தியன் சாலையில் டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணி நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், ரிவர்வியூ சாலையில் தேங்கிய மழைநீரை 100 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வடிகாலில் வெளியேற்றும் பணி நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்றது.



● வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு174க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் (15.10.2024) மதிய உணவு, குடிநீர் பாட்டில்கள், பாய் மற்றும் போர்வை உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டது.



● வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், நியூ ஆவடி சாலை, டாக்டர் அம்பேத்கர் முதல் தெருவில் தேங்கியிருந்த மழைநீரை மோட்டார் பம்புகள் மூலம் வெளியேற்றும் பணியினை மண்டல கண்காணிப்பு அலுவலர் திருமதி ஸ்ரேயா பி. சிங், (செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்) நேற்று முன்தினம் (15.10.2024) பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.



● சென்னையில் கனமழை பெய்து வருவதால், தாழ்வான பகுதிகளில் வசித்த 25 புலம் பெயர் தொழிலாளர்கள் நீலாங்கரையில் உள்ள தனியார் மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



● சென்னை கனமழை நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையில் தண்ணீர் தேக்கம் இன்றி போக்குவரத்து சீராக உள்ளது.